**கவனிக்க.-** (i) 2019.01.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.
(ii) இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டின் பதுளை மாவட்ட நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2107 - 2019 ජනවාරි මස 18 වැනි සිකුරාදා - 2019.01.18
*2107 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 94 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, சனவரி மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

91-B 81486-5,403 (2019/01)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

*அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சை - 2014(2018)*

*1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் பந்தி 08 இன் கீழ் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளின் படி மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2019, ஏப்பிறல் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தோற்றலாம். பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.*

**குறிப்பு**.- *இவ் வர்த்தமானி அறிவித்தலுக்கு சமாந்தரமாக மாகாண சேவையின் மொழிபெயர்ப்பாளர் சேவையின் விண்ணப்பதாரிகளுக்கான சட்டதிட்டங்கள் பொறுத்தமான மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலமும் வேறு நிறுவனங்களின் விண்ணப்பதாரிகளுக்கான சட்ட திட்டங்கள் குறித்த நிறுவனத்தின் மூலமும் வெளியிடப்படும்.*

ஒவ்வொரு மாகாண அரச சேவை மற்றும் ஏனைய நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் விண்ணப்பங்களை வசதியாக இனங்காண்பதற்கென பின்வரும் குறியீட்டு இலக்கங்கள் பாவிக்கப்பட வேண்டும். உரிய சேவை அல்லது நிறுவனத்தினைக் குறிப்பிடும் போது விண்ணப்பத் தலைப்பில் இவ் இலக்கங்கள் பதியப்படல் வேண்டும். இணைந்த சேவையின் அலுவலர்களுக்கான குறியீட்டு இலக்கம் 10 ஆகும். இவ் இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தின் வலதுபக்க மேல் மூலையில் உங்கள் சேவை மற்றும் சேவை நிலையத்தை குறிப்பிட வேண்டும்.

02. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2019, பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (தாபன மற்றும் வெளிநாட்டு பரீட்சை) கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், த.பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முன் வைக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. (i) விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 1.0 இலிருந்து 5.2 வரையிலான பந்திகளை 1 ஆவது பக்கத்திலும் ஏனையவை 2 ஆம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவத்தை "A4" அளவிலான தாளொன்றின் இருபக்கங்களையும் உபயோகித்து தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சிலிட்டு தயார் செய்து கொள்ள முடியுமாயின் அதை விண்ணப்பதாரியின் கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும். மாதிரிப் படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமை பெறாத தகவல்கள் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

(ii) அரசகரும மொழிக்கொள்கையின் நோக்கங்களுக்காக சகல விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அவற்றினை அதே மொழியில் நிரப்புதல் வேண்டும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும்.

04. பாடவிதானமும், பரீட்சைத் திட்டமும் -

முதலாம் பாடம் - வினாத்தாள் இல. 01

(i) பொது விவகாரம் சம்பந்தமான பகுதியிலிருந்து

(ii) (அ) உத்தியோக ஆவணம் அல்லது அறிக்கையிலிருந்தும்;

(ஆ) செய்தித்தாள் விடயம் அல்லது அறிக்கையிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் கீழ்வரும் முறைகளுள் ஏதேனும் ஒன்றுக்கு இணங்க மொழிபெயர்த்தல்.

(i) சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு
(ii) சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு
(iii) தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு

100 புள்ளிகள், 03 மணித்தியால வினாத்தாள் ஒன்று

இரண்டாம் பாடம் - வினாத்தாள் இல. 02

(i) பொது விவகாரம் சம்பந்தமான பகுதியிலிருந்து

(ii) (அ) உத்தியோக ஆவணம் அல்லது அறிக்கையிலிருந்தும்;

(ஆ) செய்தித்தாள் விடயம் அல்லது அறிக்கையிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் கீழ்வரும் முறைகளுள் ஏதேனும் ஒன்றுக்கு இணங்க மொழிபெயர்த்தல்.

(i) தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு
(ii) ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு
(iii) ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு

100 புள்ளிகள், 03 மணித்தியால வினாத்தாள் ஒன்று

* இப்பரீட்சையில் சித்தியெய்துவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு வினாத்தாளிலும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

05. விண்ணப்பதாரிகளின் கையெழுத்துக்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

06. பரீட்சைக் கட்டணங்கள் :-
இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணங்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் அடிப்படையில் அறவிடப்படும்.

(அ) முதன் முறையாக கட்டணமெதுவும் அறவிடப்படமாட்டாது;

(ஆ) அடுத்துள்ள சந்தர்ப்பத்தில் தோற்றுவதற்கான கட்டணங்கள் முழுப்பரீட்சை எடுப்பதற்கு ரூபா 500 ஆகவும் தனித்து ஒரு பாடம் எடுப்பின் ரூபா 200 ஆகவும் இருக்கும்;

(இ) பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்து தீவில் அமைந்திருக்கும் எந்தவொரு தபால்/உப தபால் அலுவலகத்தில் செலுத்திய விண்ணப்பதாரியின் பெயரில் மாத்திரம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

(ஈ) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப்படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றப்படவோ இடமளிக்கப்படமாட்டாது.

07. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்:-**

(i) விண்ணப்பங்களை அனுப்பி வைத்த சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் இன்றி அவர்களை பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கோ அல்லது பரீட்சைக்கு தோற்றுவதற்கென அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை மற்றும் திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள பரீட்சை விண்ணப்பம் மற்றும் பரீட்சைத் திணைக்களம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரதி விண்ணப்பப்படிவம் பதிவு செய்து அனுப்பிய தபால் பற்றுச்சீட்டு பெக்ஸ் ஊடாக அனுமதி அட்டையின் பிரதியொன்றை அனுப்புவதற்கு ஏதுவாக விண்ணப்பதாரியாயின் பெக்ஸ் இலக்கத்துடன் கூடிய கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள பெக்ஸ் இலக்கத்துக்கு அனுப்பி விசாரித்தல் பயனுள்ளதாகும்.

(ii) ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் அனுமதி அட்டையுடன் பிரத்தியேகமாக நேரசூசியொன்றும் வழங்கப்படும்.

(iii) இப்பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அவ்விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் எத்தண்டனைக்கும் உள்ளாதல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரிகளுக்கு விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகள், ஒழுங்கு விதிகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதானது ஒரு விண்ணப்பதாரர் அப்பரீட்சைக்கு தோற்றுவதற்கான அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது.

08. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக் கூடியதாக திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் வழங்கப்படமாட்டாது.

09. பரீட்சார்த்தியின் ஆளடையாளம் -
பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தேசிய ஆள் அடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அனுமதி அட்டையுடன் மேற்போன்ற ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

10. பரீட்சை முடிவுகளை வெளியிடல் - பரீட்சை முடிவுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் இணையத் தளத்தில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

11. பரீட்சை பற்றிய அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

12. இவ் அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதாயினும் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படின் சிங்கள அறிவித்தலே வலுவுள்ளதாகும்.

கே. வீ. பீ. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிருவாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2019, சனவரி 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையில் வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2014 (2018)**

EFFECENCY BAR EXAMINATION FOR OFFICERS IN CLASS I OF THE GOVERNMENT TRANSLATORS' SERVICE - 2014 (2018)

(கவனிக்க வேண்டியது : விண்ணப்பப்படிவம் சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியால் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்)

உங்களுக்கு உரித்தான சேவை (இதைப் பூரணப்படுத்த இவ் வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்தியைப் பார்க்கவும்)

1.0 வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4 இற்கு அமைய நீங்கள் மொழிபெயர்ப்பு செய்யவேண்டிய முறை

வினாத்தாள் இலக்கம் 01:-
சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 1
சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு - 2 ☐
தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

வினாத்தாள் இலக்கம் 02:-
தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு - 4
ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு - 5 ☐
ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 6
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

* வினாத்தாள் இலக்கம் 01 அல்லது வினாத்தாள் இலக்கம் 02 அல்லது இரு வினாத்தாள்களுக்கும் தோற்றமுடியும்.

2.0 தனிப்பட்ட தகவல்கள்:

2.1 முழுப் பெயர் ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்:- .........................................................
(உதா:- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-
.................................................................................................
(உதா:- GUNAWARDHANA H. M. S. K.)

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): .........................................................

3.0

3.1 அலுவலக/திணைக்கள/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
.................................................................................................

3.2 அலுவலக/திணைக்கள/நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி (சிங்களத்தில்/தமிழில்)
.................................................................................................

3.3 பரீட்சை அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)
.................................................................................................

4.0

4.1 தேசிய அடையாள அட்டை இல: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4.2 பிறந்த திகதி: ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

5.0 தொலைபேசி இலக்கம்:

5.1 கையடக்கத் தொலைபேசி: ☐☐☐☐☐☐☐☐☐☐

5.2 நிலையான தொலைபேசி: ☐☐☐☐☐☐☐☐☐☐

6.0 பால்
பெண் - 1 ☐
ஆண் - 0
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

7.0 தற்போது வகிக்கும் பதவி

7.1 பதவி:- ...........................................................

7.2 நியமனக் கடிதத்தின் இல:- ...........................................................

8.0 8.1 நீர் இப்பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றுகின்றீரா?

8.2 இல்லாவிட்டால், செலுத்திய பரீட்சைக் கட்டணம்

8.3 தபால்/உப தபால் அலுவலகம்

8.4 பற்றுச் சீட்டின் இலக்கம்:-

8.5 திகதி:-

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற் படப் பிரதியொன்றை தம் வசம் வைத்துக் கொள்ளவும்)

9.0 விண்ணப்பதாரியின் சான்றிதழ்:

மேற் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், விண்ணப்பப்படிவத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவரென்றும், எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு நான் அமைந்தொழுகவும் உடன்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகிறேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

.........................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி:

10.0 திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

(i) இவ் விண்ணப்பதாரி இத் திணைக்களத்திலுள்ள மொழி பெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த இணைந்த சேவைக்குரிய மொழி பெயர்ப்பாளர் என்றும்.

(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்.

(iii) இவருடைய வேலையும், நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்.

(iv) இவர் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும்

(v) இவரால் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் இத்தால் நான் சான்றுபடுத்துகின்றேன். (தேவையற்றது எனின் கீறிவிடவும்)

.................................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி:
பதவிப் பெயர்:
முகவரி:

01-442

---

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், பட்டதாரி மாணவ பயிலிளவல்நிலை (Cadetships) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்

1. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தில், பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) (ஆண்/பெண்) உத்தியோகத்தர்களுக்காக பொருத்தமான தகைமையுடைய இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் 2019.01.18 ஆந் திகதி முதல் 2019.02.01 ஆந் திகதி வரை கோரப்படுகின்றன.

2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின் பிரகாரம் முப்படையின் அலுவலகர் நிலையிலமர்த்தப்பட்டபின் அவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பட்டதாரி மாணவ பயிலிளவல்கள் (Cadets) பின்வரும் பட்டதாரி பாடநெறிகளைப் பின்வரும் இடங்களில் பயில முடியும்.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் - இரத்மலானை.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப்பட்டம் (MBBS) (5 ஆண்டுகள்);
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்);
iii. சட்டமாணி சிறப்புப்பட்டம்(LLB) (4 ஆண்டுகள்);
iv. கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4½ ஆண்டுகள்);
v. மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம். (4½ ஆண்டுகள்);
vi. கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்);
vii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணி பட்டம் (3½ ஆண்டுகள்);
viii. முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்);
ix. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்);
x. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி (3½ ஆண்டுகள்).

தெற்கு வளாகம் - சூரியவெவ

xi. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் (5½ ஆண்டுகள்);
xii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - (4½ ஆண்டுகள்);
xiii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4½ ஆண்டுகள்);
xiv. தகவல் தொழில்நுட்வியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (4½ ஆண்டுகள்);
xv. தகவல் முறையியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம் (4½ ஆண்டுகள்).

3.1. பட்டதாரி பாடநெறிகளுக்காக சேர்த்துக்கொள்ளப்படும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களின் மூன்று படைகளுக்குமான ஒதுக்கீடானது அப்படைப் பிரிவுகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் தெரிவுக்காக நடாத்தப்படும் பரீட்சைகளில் தேருநர்கள் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட பின்னர் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் இலங்கைத் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

3.2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு பிரயோகிக்கத்தக்கவாறு பின்வரும் பட்டமொன்று வழங்கப்படும்.

i. மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி சிறப்புப் (MBBS) பட்டம்;
ii. பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்;
iii. சட்டமாணி சிறப்புப்பட்டம்(LLB);
iv. கணினி விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்;
v. மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம்;
vi. கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்;
vii. தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவத்துவ விஞ்ஞானமாணிப் பட்டம்;
viii. முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி;
ix. சமூக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி;
x. தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி;
xi. கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம்;
xii. கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப பட்டம்;
xiii. அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்;
xiv. தகவல் தொழில்நுட்வியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்;
xv. தகவல் முறையியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்.

3.3. சகல பட்டப்படிப்பு பாடநெறிகளும் ஆங்கில மொழியில் மாத்திரமே நடாத்தப்படும்.

3.4. தெரிவுசெய்யப்படும் படையிளவல்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றைப் பயில்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**a.** மருத்துவம் மற்றும் சத்திரசிகிச்சையியல்மாணி (**MBBS**) - ஐந்து ஆண்டுகள் (ஆண், பெண்)

2018 ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் (உயிரியல், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்;

**b.** விமான இயந்திரவியல் / விமான பராமரிப்பு/ உயிரியல் மருத்துவம் / சிவில் / மின் மற்றும் இலத்திரனியல்/ இலத்திரனிணல் மற்றும் தொலைத்தொடர்பு/ கடல்சார் /பொறிமுறையெந்திரவியல் / எந்திர இலத்திரனியல் என்வற்றில் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் - நான்கரை ஆண்டுகள்; (ஆண், பெண்)

2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் (இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல்) கற்று குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளும் ஒரு சாதாரண (S) சித்தியும் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடையவர்கள்; (ஆண்)

**c.** சட்டமாணி சிறப்புப்பட்டம் (**LLB**) – நான்கரை ஆண்டுகள் (ஆண்) 2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்திகள் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையையும் பெற்றவர்கள் இதற்குத் தகுதியுடையவர்கள்.

கணக்கியல், அரசறிவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல், உயிரியல், உயர் கணிதம், வணிக புள்ளிவிபரவியல், வரலாறு, வணிக கற்கைகள், அளவையியலும் விஞ்ஞான முறையும், இரசாயனவியல், பொருளியல், பௌதீகவியல், கணிதவியல்/இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடக கற்கைகளும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்.

அல்லது

மேலுள்ள பாடங்களிலிருந்து ஒன்று அல்லது இரண்டு பாடங்களில் சாதாரண சித்தியும் ஏனைய ஒரு அல்லது இரண்டு பாடங்களுக்கும் கீழ்வரும் பாடங்களிலிருந்தும் குறைந்தது மொத்தம் மூன்று சாதாரண சித்திகளைப் பெறுவதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

பௌத்தம்/ பௌத்த நாகரிகம், கிரேக்கம், தமிழ், கிறிஸ்தவம் /கிறிஸ்தவ நாகரிகம், இந்து சமயம் / இந்து நாகரிகம் , லத்தீன் , கிரேக்க உரோம நாகரிகம், இஸ்லாம் / இஸ்லாமிய நாகரிகம், பிராஞ்சிய மொழி, ஜப்பான் மொழி, சீன மொழி, சிங்களம், ஆங்கிலம் (பாட எண்: 73), பாளி, அராபிய மொழி, சமஸ்கிருதம், ஜேர்மன் மொழி, விவசாய தொழில்நுட்பம், நாடகமும் அரங்கியலும்.

**d.** கணினி விஞ்ஞானமாணி (**B Sc**) சிறப்புப் பட்டம்- நான்கரை ஆண்டுகள், (ஆண், பெண்) 2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் கற்று இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரணசித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்.

இரசாயனவியல்,
உயர் கணிதம்,
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

**e.** மென்பொருள் பொறியில்மாணி சிறப்புப்பட்டம்.- நான்கரை ஆண்டுகள், (ஆண்) 2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒரு பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரணசித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையுடையவர்கள்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

**f.** கணினிப் பொறியியல் விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம். நான்கரை ஆண்டுகள், (ஆண்)
2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் இணைந்த கணிதம், பௌதிகவியல் என்பவற்றில் குறைந்தபட்சம் சாதாரண (S) சித்திகளும் பின்வரும் பாடங்களுள் ஏதேனும் ஒருபாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்.

இரசாயனவியல்
உயர் கணிதம்
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

**g.** தேவைகள் விநியோகங்கள் முகாமைத்துவ விஞ்ஞானமாணி பட்டம் - மூன்றரை ஆண்டுகள், (ஆண், பெண்)
2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம்,கணிதம் அல்லது வர்த்தகம் எனும் ஏதாவதொரு பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்

**h.** முகாமைத்துவ மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானமாணி - மூன்றரை ஆண்டுகள், (ஆண், பெண்)
2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது கணிதப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன்பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**i.** சமுக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி (**BSc**)- மூன்றரை ஆண்டுகள், (ஆண், பெண்)
2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதாவது பாடப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**j.** தந்திரோபாயக் கற்கைகள், சர்வதேச உறவுகளில் விஞ்ஞானமாணி, மூன்றரை ஆண்டுகள், (ஆண்)
2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதாவது பாடப் பிரிவில் கற்று குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**k.** கட்டிட கலையியல்மாணி சிறப்புப் பட்டம் **( B Arch**) - ஐந்தரை வருடங்கள், (ஆண்)
2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்திகள் பெற்றிருப்பதுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக் கூடிய தகைமையையும் பெற்றவர்கள் இதற்குத் தகுதியுடையவர்கள்.

i). பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு பாடம்
உயிரியல்
உயர் கணிதம்
இரசாயனவியல்
பௌதீகவியல்
இணைந்த கணிதம்
சித்திரம்
புவியியல்

அத்துடன்

ii) எஞ்சியிருக்கும் பாடம் / பாடங்கள் பின்வரும் பட்டியிலிலுள்ளன.

| | |
|---|---|
| கணக்கியல், | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| இந்து நாகரிகம் | கணிதவியல் |

| | |
|---|---|
| வணிக புள்ளிவிபரவியல், | சமஸ்கிருதம் |
| இஸ்லாமிய நாகரிகம் | ஜேர்மன் மொழி |
| கிரேக்க உரோம நாகரிகம் | அரபிய மொழி |
| அரசறிவியல் | வரலாறு |
| ஆங்கிலம் (பாட எண்: 73) | வியாபாரக் கற்கைகள் |
| சிங்களம் | ஜப்பான் மொழி |
| கிறிஸ்தவ நாகரிகம் | பொருளியல் |
| தொடர்பாடலும் ஊடக கற்கைகளும், | பாளி |
| ஹிந்தி | பிராஞ்சிய மொழி |
| பௌத்த நாகரிகம், | தமிழ் |
| மனைப்பொருளியல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| சீன மொழி | விவசாய விஞ்ஞானம் |

அத்துடன்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் கணிதத்தில் திறமைச்சித்தி அல்லது க.பொ.த (உ./த.) பரீட்சையில் கணிதத்தில் சாதாரண சித்தி என்பதுடன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்படுகிற ‘வெளி அறிகைநிலை’ எனும் பரீட்சையில் சித்தி.

**l.** அளவையியல் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் -நான்கரை ஆண்டுகள், (ஆண்)

2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்திகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கக்கூடிய தகைமையை உடையவர்கள்.

**m.** கணிய அளவையியலில் விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம்- நான்கரை ஆண்டுகள், (ஆண்)

2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பின்வரும் பாடங்களுள் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

பின்வரும் பாடங்களில் ஆகக் குறைந்தது ஏதாவது ஒரு பாடத்தில் சித்தி,

இணைந்த கணிதம் / உயர் கணிதம்

அத்துடன், கீழே குறிப்பிடப்படும் பட்டியலிலிருந்து ஏனைய பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| கணக்கியல் | பொருளியல் | வணிகப் புள்ளிவிபரவியல் |
| வியாபாரக் கற்கைகள் | பௌதிகவியல் | இரசாயனவியல் |
| தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் | | |

இத்தகைமைகளுடன் பரீட்சார்த்திகள் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடு களையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அ. கணித பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தி (C).

ஆ. விஞ்ஞான பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தி (S).

**n.** தகவல் தொழில்நுட்வியல்மாணி சிறப்புப்பட்டம் - நான்கரை ஆண்டுகள், (ஆண்)
2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தொழில்நுட்ப துறை பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

**o.** தகவல் முறையியல்மாணி சிறப்புப்பட்டம்- நான்கரை ஆண்டுகள், (ஆண்)

2018 அல்லது 2017 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் தொழில்நுட்ப துறை பிரிவு தவிர்ந்த ஏதாவதொரு பாடப் பிரிவில் குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

3.5. தெரிவுசெய்யப்பட்ட பயிலிளவல்கள் (cadets) அப்பாடநெறிகளுக்குரிய பொதுவான பாடங்களுக்குமேலதிகமாக அந்தந்த பாடநெறிகளுக்கு பிரயோகிக்கத்தக்கதாக ஆங்கிலம், முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் முதலிய பாடங்களை கட்டாயமாக பயிலுதல் வேண்டும்.

3.6. அத்துடன் இவர்கள் தமது கற்கைநெறிகளின் போது உடல்வாண்மை விருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் வேண்டப்படுவர்.

4. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிக்குத் தேவையான ஏனைய தகைமைகள்.

**தேருநர்கள்:**

அ. இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.

ஆ. 2019.02.01 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**கல்வித் தகைமைகள்:**

இ. க.பொ.த. (உ./த.) பரீட்சையில் சம்பந்தப்பட்ட பாடப்பிரிவில் மூன்று பாடங்களில் குறைந்தபட்சம் மூன்று சாதாரண (S) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை உடையவர்களாயிருத்தல் வேண்டும்.

அத்துடன்,

i. பொதுப் பொதுவறிவுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

ii. அனைத்து கற்கைகளுக்கும் க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில மொழிப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தியைப் (C) பெற்றிருத்தல் கட்டாயமானதாகும்.

iii. இலங்கை வான்படைக்குரிய கல்வித் தகைமைகள். ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் என்பற்றில் திறமைச் சித்தியும் சிங்களம் அல்லது தமிழில் சாதாரண சித்தியும் அடங்கலாக ஒரு அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (மேலதிக மற்றும் தெரிவுப்பாடங்கள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது).

ஈ. குறைந்தபட்சம் பின்வரும் உடல் அளவுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

| | | இராணுவம் | | கடற்படை | | வான்படை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| உயரம் | MBBS | 5' 6" | 5' 3" | 168 cm | 160 cm | 5' 5" | 5' 3" |
| | ஏனைய பட்டங்கள் | 5' 6" | 5' 4" | | | 5' 6" | 5' 4" |
| பாரம் | | 50 Kg | - | 52 kg | 41kg | -- | -- |
| **BMI** | | - | - | - | - | <26 and >17 | <25 and >17 |
| மார்பு | | 32" (விரிவடையாதது) | - | 81 cm | - | 32" (Min. 81 cm) | - |

| | கண் பார்வை தெளிவு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இராணுவம் | | கடற்படை | | வான்படை | | | |
| இடம் | வலம் | இடம் | வலம் | இடம் | வலம் | **If specs use** | நிறப் பார்வை |
| 6/9 | 6/6 | 6/6 | 6/6 | 6/6 | 6/6 | Without | CP 2 |
| Without Lenses | | Without Lenses | | | | | |

**குறிப்பு**: (விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திலான சாதனைகளை அல்லது அதற்கீடான வேறு செயற்பாடுகளை பரீட்சார்த்தி கொண்டிருந்தால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவர் ஆகியோரினால் மேற்படி உடலளவு நியமங்கள் தளர்த்தப்படலாம்)

உ. பரீட்சார்த்தி அவசியப்படும் மருத்துவ நியமங்களை உறுதிப்படுத்த வேண்டும் - பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக முகாமைத்துவச் சபையின் தலைவருமானவரின் திருப்திக்கு ஏற்ப வேண்டப்படுத்தப்பட்ட மாதிரிக்கமைய மருத்துவப் பிரகடனப் படிவத்தை சமர்ப்பித்தன் பின்னர், மருத்துவ சோதனையில் சித்தியடையுமாறு வெற்றிகரமான பரீடசார்த்திகள் வேண்டப் படுவர். விண்ணப்பதாரியொருவர் மருத்துவப் பிரகடனப் படிவத்தில் பொய்யான தகவல்களை அளித்துள்ளார் என தெரிவு செய்யப்படுவதற்கு முன்பு தெரியவந்தால், அவர் தகுதியற்றவராக்கப்படுவதுடன் பொய்யான தகவல் களை வழங்கியமை எனும் விதியின் கீழ் தண்டனைக்குரியவராவார்.

(மருத்துவ உறுதிமொழிப் படிவத்தினை பல்கலைக்கழகத்தின் **www.kdu.ac.lk** எனும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.)

ஊ. பரீட்சார்த்தி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (எந்தவொரு பயிலிளவலும் பயிற்சியின் கீழ் உள்ள காலப்பகுதியில் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்க்ள என்பதுடன் படை சேவை ஒழுங்கு விதிகளின் கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் அவர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்)

5. சேவை நிபந்தனைகள்.- தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை அல்லது சூரியவெவ தெற்கு வளாக பயிலிளவல் (Officer Cadet) உத்தியோகத்தர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் ஆகியவற்றின் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு கட்டுப்பட்டவர்கள். சேர்த்துக் கொள்ளப்படும் தேருநர்கள் கிரமமான படைகளில் இணைப்புச் செய்யப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொடர்ச்சியான தும் இடையறாததுமான பன்னிரெண்டு (12) வருடங்களுக்கு குறையாத கட்டாயமான காலப்பகுதி சேவையாற்றுதல் வேண்டும்.

6. பல்கலைக்கழக அனுமதி செய்யும் நேரத்தில், பரீட்சார்த்திகள் மேற்கூறியபடி குறித்த பட்டத்தைப் பெற்ற பின்னர் குறித்த காலப்பகுதியில் கட்டாய சேவை செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

7. பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு மாதமொன்றுக்கு அண்ணளவாக ரூ. 38,000.00 கொண்ட சம்பளமும் படியும் கொடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றி பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்:

(i) உணவு மற்றும் தங்குமிடம்;
(ii) சீருடைகள்;
(iii) அதிகாரியின் வேலையாள் வசதிகள்;
(iv) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்;
(v) மருத்துவ வசதிகள்.

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு இணைப்புச் செய்யப்படுகை யில், சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்:

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும்:

(i) தகைமைப் படி;
(ii) பங்கீட்டுப்படி;
(iii) "உள்ளே வாழுமாறு" கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி (திருமணமான அலுவலர்களுக்கு மட்டும்);
(iv) சீருடை பராமரிப்புப் படி.

(ஆ) வேறு வசதிகளும் கொடுப்பனவுகளும்:

(i) "உள்ளே வாழுமாறு'' கட்டளையிடும்போது இலவச தங்குமிடவசதி
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி
(iii) சீருடைப் படி
(iv) அதிகாரியின் வேலையாள் படி

9. தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் உத்தியோகத்தர்களின் கொடுப்பனவு முறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் பின்வரும் கட்டளைகள் கையாளப்படும்.

(i) தரைப்படை/ கடற்படை/ விமானப்படையின் சம்பளக் கோவை;

(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப்படை உத்தியோகத்தர் களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்;

(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/ கடற்படை/ விமானப் படையின் நடைமுறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை.

10. பயிற்சியின் காலத்தின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தரினால் விபரிக்கப்பட்டது போல் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளாலும் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் வேண்டப்படுவர்.

11. பயிற்சியின் கீழுள்ள பயிலிளவல் (Cadet) அலுவலர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் எந்தவொரு பகுதிக்கும் பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு பாத்திரவாளியாவார்கள்.

12. பயிற்சிபெறும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் உள்ளே வாழுமாறு வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

13. மொழித் தேவைப்பாடுகள் - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படும் ஏதாவது சட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்குமாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

14. ஆளடையாளத்தை நிரூபித்தல்.- தேருநர்கள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை அல்லது மோட்டார் வாகனங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

15. விண்ணப்பங்கள்:- இதற்குரிய விண்ணப்பப்படிவத்தையும் கைநூலையும் இப்பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்ய முடியும். இணையதளம் **www.kdu.ac.lk**

16. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் போது, "உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்'' சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை - இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் "9405831'' இற்கு வரவு வைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு ரூபா 1,000 (ஆயிரம் ரூபா) தொகையினை கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சரிவர நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், அவ்விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது. உபவேந்தரவர்களால் நியமனம் செய்யப்படும் தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படும் நியதிகளுக்கு இணங்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ள அபேட்சகர்களிடையே பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் ஆரம்ப நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

17. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் "பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை'' எனும் முகவரிக்கு 2019.02.01 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பயிலிளவல் **(Cadet)** உத்தியோகத்தருக்கான விண்ணப்பம்" என்பதையும் விண்ணப்பித்துள்ள கற்கைப் பிரிவையும் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

18. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/கூட்டுத்தாபன/ நிலைய தலைவரினூடாக சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து விடுவிப்புச்செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக்கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

19. விண்ணப்பங்களுடன் பிறப்புப் பதிவுச் சான்றிதழ், க.பொ.த. (சா./த.) மற்றும் க.பொ.த. (உ./த.) பெறுபேற்றுத் தாள்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி தகுதிக்கான பெறுபேற்றுத்தாள் ஆகிய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை மாத்திரமே இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

20. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான தரங்களை கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் அவசியமெனத் தீர்மானிக்கப்படுகின்ற வேறு சோதனைகளில் பங்குபற்றுமாறு வேண்டிக் கொள்ளப்படுவார்கள். இறுதித் தெரிவானது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட இறுதி சபையினால் மேற்கொள்ளப்படும்.

21. நேர்முகப் பரீட்சைகளுக்கும் ஏனைய சோதனைகளுக்கும் தெரிவு செய்யப்படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்காக விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படக்கூடிய பிரயாண அல்லது வேறு செலவினங்கள் இப்பல்கலைக்கழகத்தினால் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

22. தேருநர் ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். **தேருநர் ஒருவரை தெரிவு செய்வதற்காக எவ்வழியிலேனும் செல்வாக்குப் பரப்புரை செய்தல் அத்தேருநருக்கான தகைமையீனமாக கருதப்படும்**.

23. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி இபப்ல்கலைக்கழகத்தினால் அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்படமாட்டாது.

24. வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கும் இடையே ஏதேனும் பரஸ்பர வேறுபாடுகள் ஏற்படின், சிங்கள மொழி மூலமான வர்த்தமானி அறிவித்தலைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

ஹேமசிறி பெர்னாண்டோ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு மற்றும் முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்.

1-765